முருகப்பெருமான் துணை

**மகான் திருநாவுக்கரசர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.12.2022**, செவ்வாய்கிழமை

1. வரம்தரும் ஞான வாள்ளலே
   வையகம் காக்கும் அண்ணலே
   தரமிக்க தொண்டர்படைகளை
   தவபலத்தால் உருவாக்கும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் சுபகிருது தேள் திங்கள்
   வரங்களென இருபான் திகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் **20** ம் நாள் **06.12.2022**, செவ்வாய்கிழமை)
   வளமுற அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை திருநாவுக்கரசர் யானும்
   அருளுவேன் உலகோர் நலம்பெற
   பசிபிணி கலியினில் விரட்டிட
   பரோபகார சக்தியாக வந்த
4. வந்தநல் ஆறுமுக ஞானியே
   வரம்தனை உன் கரம்பட
   இந்தவித புவியில் பெரும் மக்கள்
   எந்தவகை இன்னலுமின்றி
5. இன்றியே ஞானபலமும் கூடி
   இனி பிறவா பேற்றுக்கான
   நன்றான அன்னதான சேவையை
   ஞானிகள் நாமமாகச் சொல்லி
6. சொல்லியே நாடெங்கிலும் செய்து
   சுத்த சைவ மெய்நெறிபடவே
   வல்லமை கண்டு சிறப்பர்
   வருங்காலம் அறியும் ஞானம் கூடி
7. கூடியே தன்பலம் மற்றவரும்
   குடியவரும் கண்டுத் தேறிட
   தடையிலா சக்திதனை வழங்கி
   தனித்துவம் கண்டு சிறப்பர்
8. சிறப்புதரும் அரங்க மகானின்
   சேவைகள் அனைத்துமே இனி
   அறத்தின் பலமாக ஆறுமுகனாக
   அனுகூலம் மிகுதியாக இருக்க
9. இருக்கவே செய்வினை கருமவினை என
   இன்னலில் தவிக்கும் மக்கள்
   கருத்தாக அரங்கன் வழியை
   கண்டடைந்து பொருளுதவி செய்து

10. செய்துமே தொண்டு வழி கலந்து
சீடர்களாகிக் கொள்கை மாறா
அய்யமறத் தொடர்ந்து வர
அழியாமை கண்டுத் தேறி

11. தேறியே ஞானிகள் ஆவர்
தேசிகன் வழிகாட்டலின்படி
மாறுதலை உலகினில் புரிவர்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

—சுபம்—